**செய்தி வெளியீடு எண் : 1172** **நாள் : 13.06.2023**

**செய்தி வெளியீடு**

**சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023–24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோட்டூரில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலை ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்களும் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர்.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023–24 ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் இன்று (13.6.2023) சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோட்டூரில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலை ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர்.

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023–24 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு 50 அறிவிப்புகளை அறிவித்தார்கள். அந்த 50 அறிவிப்புகளில் ஒன்றான சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோட்டூரில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலை ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது தொடர்பாக இன்று கள ஆய்வு மேற்கொண்டோம்.

இன்றோடு (13.06.2023) 32 இடங்களில் கள ஆய்வை தினந்தோறும் மேற்கொள்ளப்பட்டு, அறிவித்த அனைத்து திட்டங்களையும் இந்த ஆண்டு பணிகளை செய்வதற்குரிய வேகத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஈடுபட்டிருக்கிறது. அந்த வகையில் இன்று ஆய்வு மேற்கொண்ட சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு அறிவிக்கப்பட்ட பணியாக கோட்டூர் விளையாட்டு திடலை மேம்படுத்துவது, இந்த கோட்டூர் விளையாட்டு திடல் பொறுத்தவரை பல விளையாட்டு வீரர்களை உருவாக்கி, இன்றைக்கு ரயில்வே, ஐசிஎப் போன்ற பெரிய நிறுவனங்களில் வேலைவாய்ப்பையும் பெற்றுத்தந்திருக்கின்ற மைதானமாக அமைந்திருக்கிறது.

எனவே, இந்த மைதானத்தை மேம்படுத்தி தர வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்தது. இதை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது என்று சட்டமன்றத்தில் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார். அறிவித்ததற்கிணங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், துறையின் உயர் அலுவலர்களும் பங்கேற்று ஆய்வு மேற்கொண்டிருக்கிறார்கள். ஒரு வரைபடமும் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. 1.16 ஏக்கர் நில பரப்பிலான இந்த விளையாட்டு மைதானத்தில் சுற்றிலும் நடைபயிற்சிக்கான பாதை அமைப்பது, சிறுவர்களுக்கான விளையாட்டு திடல் ஏற்படுத்துவது, மாலை நேரங்களில் கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்துவதற்குரிய கேலரி ஒன்றை உருவாக்குவது, அதேபோல் ஏற்கனவே இம்மைதானத்தில் இருக்கின்ற உடற்பயிற்சி கூடத்தை நவீனமயமாக்குவது போன்ற பல்வேறு பணிகளை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் உடனடியாக இதற்கான திட்ட மதிப்பீடுகளை தயாரிக்க சொல்லி ஒரு மாத காலத்திற்குள் அந்த ஒப்பந்தங்கள் விட அறிவுறுத்தியிருக்கிறார். நிச்சயம் ஒரு மாதத்தில் இந்த பணி மேற்கொள்ளப்படும் போது, அறிவித்த ஓராண்டிற்குள்ளாகவே இப்பணி செய்து முடிக்கப்படும் என்கின்ற வகையில் வேகத்தோடு இந்த பணியினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். சைதை தொகுதி மக்களின் சார்பில் வணக்கத்திற்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நாங்கள் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். **இவ்வாறு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயல் அலுவலர் திருமதி. கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (கல்வி) திருமதி. ஷரண்யா அறி, இ.ஆ.ப., அவர்கள், தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.எம்.பி. அமித், இ.ஆ.ப., அவர்கள், அடையாறு மண்டலக் குழுத்தலைவர் திரு.துரைராஜ் அவர்கள், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.என்.எஸ்.பெரியசாமி, திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, மாநகராட்சி மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in